## கூடுதல் சார்பு நீதிமன்றம், பழனி

## S.C No. 16 /2019

2022– வருடம் நவம்பர் 23–ம் நாள் என்பவரின் சாட்சிய வாக்குமூலம் 1873–ம் வருடத்தின் 10–வது விதிமுறைகளின்படி ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | மாரியப்பன் (அ.சா.–7) | தொழில் | : | |
| த/பெ., க/பெ. | : | | வயது | : | |
| கிராமம் | : | | இனம் | : | |
| தாலுகா | : | | நாள் | : | 23.11.2022 |
| மாவட்டம் | : | | | | |

முதல் விசாரணை :– (சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டது.)

நான் பழனி சத்யா நகரில் குடியிருந்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியாது. காட்டப்படும் எதிரியின் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சி ஆகியவற்றில் உள்ள முதலாவது சாட்சி கையெழுத்து என்னுடையது தான். சுமார் 6 வருடங்களுக்கு முன்பு காலை 11 மணியளவில் நான் வேல் மருத்துவமனைக்கு சென்றிருந்த போது அங்கு போலீசார் மற்றும் பொது மக்கள் கூட்டமாக நின்று கொண்டிருந்தனர். நான் அங்கு சென்று பார்த்த போது போலீசார் ஒருவரை விசாரணை செய்து கொண்டிருந்தனர். அது சம்பந்தமாக போலீசார் என்னிடம் கையெழுத்து கேட்டனர். அதன் படி நானும் கையொப்பமிட்டேன். வழக்கு பற்றிய விபரம் எனக்குத் தெரியாது. எதிரி ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து மட்டும் அ.சா.ஆ.–6. அத்தாட்சியில் உள்ள கையெழுத்து மட்டும் அ.சா.ஆ.–7. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக பாவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டது. அனுமதி வழங்கப்பட்டது.

அரசு தரப்பு குறுக்கு விசாரணை :

கடந்த 8.9.2016–ம் தேதியன்று காலை 11 மணிக்கு வேல் மருத்துவமனை அருகில் நானும் எனது தெருவைச் சேர்ந்த சுப்பிரமணி மகன் சரவணன் என்பவரும் நின்று கொண்டிருந்த போது அங்கு வந்த பழனி நகர் காவல் ஆய்வாளர் அங்கு நின்று கொண்டிருந்த கல்லாப்பட்டி என்ற முத்துக்குமார் என்பவரை கைது செய்து விசாரணை செய்தார் என்றும் அப்போது அவர் தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை ஆய்வாளர் எங்கள் முன்னிலையில் பதிவு செய்தார் என்றும் அதில் நாங்கள் இருவரும் சாட்சி கையெழுத்து போட்டோம் என்றும் சொன்னால் சரியல்ல. மேலும் எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின்

அடிப்படையில் சின்னைய தெருலில் உள்ள சிண்டெக்ஸ் டேங்க் பின்புறம் எதிரி மறைத்து வைத்திருந்த கத்தியை எங்கள் முன்னிலையில் கைப்பற்றியதற்கு தயார் செய்த அத்தாட்சியிலும் நாங்கள் இருவரும் சாட்சி கையெத்து போட்டோம் என்றும் சொன்னால் சரியல்ல. தற்போது எதிரிக்கு பயந்து வழக்கு பற்றி ஒன்றும் தெரியாது என பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை : இல்லை.

JJEYASUTHAHAR Digitally signed by JJEYASUTHAHAR Date: 2022.11.23 16:36:55 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
பழனி.